

தென்னிந்தியத் திருச்சபை - சென்னைப் பேராயம்

தூய தோமையார் மலை குருசேகரம்

# வெஸ்லி தமிழ் ஆலயம்

## பிப்ரவரி 2023




பாடகர் குழு கிறிஸ்மஸ் வழிபாடு



பெத்தலையில் ஒரு கவியரங்கம்

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் திருபெயரில் நல்வாழ்த்துக்கள்.

ஒரு புதிய ஆண்டின் முதல் மாத்த்தினை கடந்துவர கிருபை பாராட்டிய கடவுளுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

## ஆலய ஐக்கிய சுற்றுலா

கடந்த 16.01.2023 திங்களன்று நமது ஆலயத்திலிருந்து சென்ற ஐக்கிய சுற்றுலா பயணத்தில் கடவுளின் பாதுகாப்பு நம்மோடிருந்ததற்காக கடவுளுக்கு நன்றி ஏறெடுக்கிறேன். நல்ல மகிழ்ச்சியான அதே நேரத்தில் ஒரு திருப்பணி தலத்தை பற்றி அறிந்துகொள்கிற அனுபவமாக அமைந்தது. பெரியவர்களும், பிள்ளைகளும் நல்ல ஐக்கிய வேளைகளை பெற்றுக்கொண்டார்கள். இதற்காக பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மிக சிறப்பாக திட்டமிட்டு, ஒழுங்குகளை செய்து 'கொடுத்த சேகர செயலர் **திரு. R. சற்குணம்**, சேகர பொருளர் **திரு. P. எடிசன்**, கன்வினர் **திரு. காஸ்பல் ரூபன்** மற்றும் அவர்களுக்கு உதவியாக இருந்த சேகர குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், ஆலய பணியாளர் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

NMSI-ன் தலைவர், நமது பேராயர், **பேரருள்திரு. அறிவர். J. ஜார்ஜ் ஸ்டீபன்** ஐயா அவர்களுக்கும், NMSI-ன் பொது செயலாளர் **ஆயர் அருள் திரு. ஹென்றி ஜெப ரிச்சர்ட்** ஐயா அவர்களுக்கும் **Rev. ரவிச்சந்திரன், திரு. பால் டேனியல், திரு. ஆரோன்** ஆகிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

## இளம் தம்பதியர் ஐக்கியம் – சிறப்பு கூடுகை

கடவுளின் பெரிதான கிருபையால் கடந்த 22.01.2023 ஞாயிறு வழிபாட்டிற்கு பிறகு நடைபெற்ற இளம் தம்பதியருக்கான (திருமணம் முடிந்து 10 ஆண்டுகளுக்குள்) ஐக்கியம் துவங்கப்பட்டு அன்றே அதன் முதல் சிறப்பு கூடுகை நடைபெற்றது. நமது ஆலயத்தின் 18 தம்பதியர் இக்கூடுகையில் பங்கேற்று இறையாசி பெற்றனர். கூடுகையை ஆசிர்வாதமாக நடத்திக் கொடுத்த **Rev. ஜேம்ஸ் கெய்சர்** ஐயா அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் திருச்சபையின் சார்பில் நன்றிகளை ஏறெடுக்கிறேன். இதற்காக அதிகமாக பிரயாசப்பட்ட சேகர குழு அங்கத்தினர்கள், தன்னார்வலர்கள், சேகர செயலர் மற்றும் பொருளர் ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். புகைப்படங்களை எடுக்க உதவிய **திரு. செல்வின்** அவர்களுக்கும், பதிவுகளை செய்ய உதவிய ஏனைய **மீடியா குழுவினருக்கும்**, பங்கேற்ற தம்பதிகளுக்கு வழங்கிய நினைவு பரிசுகள், Note Pad, Backdrop, Photo frame ஆகியவற்றை மிக நேர்த்தியாக Design செய்து கொடுத்த **திரு. கலைச்செல்வன்** அவர்களுக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பாரட்டுகளை தெரிவிக்கிறேன்.

இளம் தம்பதியரின் தொடர் கூடுகைகளை குறித்து திட்டமிட்டு ஒவ்வொரு மாதமும் கூடி தங்கள் ஐக்கியத்தையும், ஆண்டவருக்குள் வளரும் குடும்பங்களாக வாழும் அனுபவத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

இவர்களைப் போன்று திருமணம் முடித்து 10 ஆண்டுகளுக்குள் உள்ள தம்பதியர் இவர்களோடு மாதாந்திர கூடுகையில் பங்கேற்க அழைக்கப்படுகிறீர்கள்.

## குடியரசுதின கொடியேற்றம் மற்றும் மரவிழா

கடந்த 26.01.2023 அன்று காலை 8.30 மணிக்கு நடைபெற்ற குடியரசுதின கொடியேற்றத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்று பிற்பகல் 3.00 மணிக்கு தொடங்கி நடைபெற்ற மரவிழா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற, அவர்களை உற்சாகப்படுத்திய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து ஒழுங்குகளையும் செய்து தந்த சேகர செயலர், பொருளருக்கும், தன்னார்வலர்களுக்கும், அந்த நிகழ்வை பொறுப்பேற்று நடத்தித்தந்த **திரு. ஜோசப் விஜய்சிங்** அவர்களுக்கும், அவருக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்த உதவி செய்த அனைவருக்கும் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு நிகழ்வுகளிலும் பல விதமான உதவிகளை செய்த **திரு. பீட்டர்** அவர்களுக்கும், **திரு. டேனியல்** அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

---

## அரசு தேர்வு எழுதுவோருக்கான சிறப்பு இறைவேண்டல் கூடுகை

கடவுளின் பெரிதான கிருபையால் கடந்த 29.01.2023 ஞாயிறு வழிபாட்டினை தொடர்ந்து இக்கூடுகை நடைபெற்றது.

கூடுகையின் துவக்கத்தில் துதி ஆராதனை, Choreography, Skit, ஆகியவற்றை மிக நேர்த்தியாக பயிற்சி செய்து - கடவுள் நாமம் மகிமைப்படும் படியாகவும் - தேர்வு எழுதும் பிள்ளைகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலும் நடத்திக் கொடுத்த நமது ஆலய வாலிப ஐக்கிய சங்கத்தின் பிள்ளைகளுக்கும், அதை ஒழுங்கு செய்து கொடுத்த கன்வீனர் திரு. பிரவீன் அவர்களுக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளையும், பாராட்டுகளை தெரிவிக்கிறேன்.

ஆழமான நம்பிக்கை தரக்கூடிய இறை செய்தியில் வழி நடத்தின Dr. A. ஜார்ஜ் ஐயா அவர்களுக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன். ஏனைய எல்லா ஒழுங்குகளையும் செய்து கொடுத்த சேகர குழுவினருக்கும், பொறுப்பாளர்களுக்கும், நேரலையில் ஒளிபரப்பு செய்த மீடியா குழுவினருக்கும்

நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். ஆலயத்திலிருந்து வழங்கிய பரிசோடு, ஒரு குடும்பத்தினரும் பிள்ளைகள் அனைவருக்கும் சிறப்பு பரிசினை வழங்கினார்கள் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

## ஆண்கள் ஞாயிறு மற்றும் ஆண்கள் சிறப்பு கூடுகை

வருகின்ற **12.02.2023** ஞாயிறு வழிபாடு ஆண்கள் வழிபாடாக நடைபெறும். வழிபாட்டினைத் தொடர்ந்து ஆண்களுக்கான சிறப்பு கூடுகை நடைபெறும். நமது ஆலயத்தின் அனைத்து ஆண்களும் இந்த கூடுகையில் கலந்து கொண்டு இறையாசி பெற்றிட அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள். உணவு ஆயத்தங்களை செய்ய வேண்டி உள்ளதால் தங்கள் வருகையை முன் கூட்டியே பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## ஞாயிறு மாலை வழிபாடுகள்

ஞாயிற்று கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு மாலை வழிபாடு நடைபெற்று வருகிறது. அந்த வழிபாடுகளை அநேகர் பங்கேற்று நடத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்படுகிறது. திருச்சபையாராக நாம் அனைவரும் இணைந்து நடத்துகிற, பங்கேற்கிற, பங்களிக்கிற வழிபாடுகளாக அமைய முயற்சிப்போம். முதல் முயற்சியாக இம்மாதமுதல் அதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றது. வருகின்ற 05.02.2023 ஞாயிறு மாலை வழிபாடு **ஜெப ஐக்கிய குழு** பொறுப்பேற்று நடத்துவார்கள். 19.02.2023 மூன்றாம் ஞாயிறு மாலை வழிபாடு **முதியோர் ஐக்கியம்** பொறுப்பேற்று நடத்துவார்கள். வரும் மாதங்களில் மற்ற ஐக்கிய சங்கங்களோடு கலந்து ஆலோசித்து - ஒவ்வொரு ஞாயிறு மாலை வழிபாட்டையும் - ஒவ்வொரு ஐக்கிய சங்கம் பொறுப்பேற்று நடத்த திட்டமிடுவோம்.

# 2023 லெந்துகால சிறப்பு வழிபாடுகள் மற்றும் நிகழ்வுகள்

வருகின்ற 22.02.2023 புதன்கிழமை அன்று லெந்துகாலத்தின் துவக்க நாளாகிய சாம்பல் புதன் வழிபாடு தொடங்கி அனைத்து வழிபாடுகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் யாவற்றிக்காவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

(i) **சிலுவையின் நிழலில் - அன்பரின் பாதத்தில் அனுதினமும்**

வரும் லெந்து காலத்தின் - ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணி முதல் 7.00 மணி வரை நமது ஆலயத்தில் நடைபெறும் - **"சிலுவையின் நிழலில் - அன்பரின் பாதத்தில் அனுதினமும்"** - என்கிற தியான கூடுகைக்கு அனைவரும் வந்து இறையாசி பெற அன்புடன் அழைக்கிறேன்.

(ii) **லெந்து கால வெள்ளிகிழமைகள் - தொடர் தியானம்**

நமது ஆலயத்தில் லெந்துகால ஆறு வெள்ளிகிழமைகளிலும் மாலை 6.30 மணிக்கு **"ஆசரிப்பு கூடாரம் - மீட்பின் அடையாளம்"** என்கிற தலைப்பில் தொடர் தியானம் தியானிக்க உள்ளோம். அனைவரும் தவறாமல் பங்கு பெற்று இறையாசி பெறுவோம்.

# காலண்டர் வசனம் எழுதுதல்

திருமறை வார்த்தைகளின் மீதுள்ள உங்கள் ஆர்வம் என்னால் பார்க்க முடிந்தது. அநேகர் இந்த பயிற்சியில் பங்குப் பெற்று வருகிறீர்கள். தொடர்ந்து இவ்வாண்டிலும் இந்த ஆன்மிகப் பயிற்சியில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

திருமறை வார்த்தைகளை கைகளில் அல்ல, உள்ளங்களில் சுமப்போம்.

## திருமறைப் போட்டி - நாகூம்

3 அத்தியாயங்களையும் 47 திருவாக்கியங்களையும் கொண்ட நாகூம் திருவாக்கினரின் நூலில் இருந்து 26.02.2023 ஞாயிறு வழிபாட்டுக்கு பிறகு திருமறைப் போட்டி நடைபெறும். ஆயத்தப்பட்டு அதில் பங்கு பெற அன்புடன் அழைக்கிறேன்.

லெந்து காலத்தின் அனைத்து வழிபாடுகளிலும், நிகழ்வுகளிலும் தவறாமல் பங்கு பெறுங்கள்.

திரியேகக்கடவுள்உங்கள்அனைவரையும்ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

இறைபணியில் உங்கள்,
ஆயர்



குறிப்பு : தங்களின் ஜெப தேவைகளுக்குத் தயங்காமல் எப்போது வேண்டுமானாலும் என்னைத் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி : 044-22342969

## உபவாச ஜெபம்



**நாள் : 04-02-2023, சனிக்கிழமை**

**நேரம் : காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை**

**பெண்கள் - உபவாச ஜெபம் நடைபெறும்.**

# சிலுவையின் நிழலில், அன்பரின் பாதத்தில் அனுதினமும்

**"கடவுளின் குரலும் - மனிதனின் வாழ்வும்"**

இந்த லெந்து காலம் நம் வாழ்வை சீர்தூக்கிப் பார்ப்பதற்கும், கடவுள் விரும்பும் வண்ணம் நம் வாழ்வை சீர்திருத்திக்கொள்ளவும் நமக்கு அருளப்படுகிற அருள் காலமாகும்.

நம்முடைய வாழ்வில் ஆண்டுகள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன, ஆனால் நம் வாழ்வு - எந்த மாற்றமுமில்லாமல் வாழ்ந்த வண்ணமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதில் ஒரு மாற்றம் வேண்டும்.

**"அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும்" - ஏசா. *55:11***

எவ்வாறு என்பது ஏசாயா 55:10 - ல் விளக்கப்பட்டுள்ளது.

உலகின் பயிர்கள் வளருவதற்கு வானத்திலிருந்து பொழியும் மழைத் தண்ணிர் எவ்வளவு முக்கியமோ அது போல கடவுளுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் நம்மை ஆவிக்குரிய வாழ்வில் வளரச் செய்யும்.

நாம் கடவுளுடைய குரலுக்கு எப்படி பதில் செய்யவேண்டும் என திருமறை தெளிவாக கூறுகின்றது. நாம் கடவுளின் குரலை ஆவலுடன் கேட்க வேண்டும்.

**ஏசாயா *1:10* "..... நம் ஆண்டவரின் அறிவுரையைக் கேளுங்கள்; அவர்தம் கட்டளைக்கு செவி சாயுங்கள்."**

**எரே. *7:2* "..... யூதாவின் மக்களே! நீங்கள் அனைவரும் கேளுங்கள்."**

கடவுளுடைய குரலை புரிந்து கொள்ள விருப்பம் வேண்டும். அந்த குரலை நேசிக்க வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவரது குரலுக்கு கீழ்படிந்து அதன்படி நடக்கவேண்டும்.

வரும் லெந்து காலத்தின் - ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணி முதல் 7.00 மணி வரை நமது ஆலயத்தில் நடைபெறும் - **"சிலுவையின் நிழலில் - அன்பரின் பாதத்தில் அனுதினமும்"** - என்கிற தியான கூடுகைக்கு அனைவரும் வந்து இறையாசி பெற அன்புடன் அழைக்கிறேன். "அமர்ந்து தியானிப்போம் - வாழ்வின் மாற்றத்தை உறுதி செய்வோம்.

| சிலுவையின் நிழலில் - அன்பரின் பாதத்தில் அனுதினமும் - லெந்து கால தியானம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | நாள் | தியானத்தின் தலைப்பு | திருமறை பகுதி |
| 1 | 23.02.2023 | "நீ எங்கே இருக்கின்றாய்?" | தொ. நூல் 3:8-13 |
| 2 | 24.02.2023 | "மோசே, மோசே" | வி. ப. 3:1-6 |
| 3 | 25.02.2023 | "இறங்கிச் செல்" | வி. ப. 19:16-21 |
| 4 | 27.02.2023 | "எதுவரை எனக்கெதிராக முறுமுறுப்பர்?" | எண். 14:23-27 |
| 5 | 28.02.2023 | "என் வார்த்தைகளை கேட்கச் செய்வேன்" | இ. ச. 4:5-10 |

| லெந்து கால வெள்ளிகிழமைகள் - தொடர் தியானம் ஆசரிப்பு கூடாரம் - மீட்பின் அடையாளம் | | | |
|---|---|---|---|
| நாள் | நேரம் | தியானத்தின் தலைப்பு | அருளுரையாளர் |
| 24.02.2023 | மாலை 6.30 | ஆசரிப்பு கூடாரம் - கடவுள் வசிக்கும் இடம் Tabernacle - The Dwelling Place of God | அருள்திரு. **ஜேம்ஸ் ஜெய்சர்** |


ஐக்கிய சங்கங்களின் கிறிஸ்மஸ் கீத வழிபாடு


ஞாயிறு பள்ளி கிறிஸ்மஸ் விழா



கிறிஸ்மஸ் – 2022 & புதிய ஆண்டு 2023 வழிபாடுகள்





அரசு தேர்வு எழுதுவோருக்கான சிறப்பு இறைவேண்டல் கூடுகை

# திருமறைக்குத் திரும்புவோம்

**"பாலை நிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார்...."** *மாற். 1:13*

லெந்து காலம், கிறிஸ்தவ வாழ்வில் ஓர் சிறந்த அனுபவத்தைப் பெறும் நாட்களாகும்.இக்காலத்தில் உபவாசம் இருப்பது திருச்சபையின் பாரம்பரியமாகும்.உபவாசம் என்பது ஜெபம். ஈகை என்னும் பக்திப் பயிற்சிகளில் ஒன்றாக மத்தேயு நற்செய்தி நூலில் குறிப்பிடப்படுகிறது. மத். 6:1-18

உபவாசம் என்னும் சொல் எபிரேய மொழியில் 'ட்ஸ்யூம்' 'TSUWM' என்னும் சொல்லினால் சுட்டப்படுகிறது. இச்சொல்லுக்கு வாயை மூடுதல் என்று பொருள். வாயை மூடுதல் என்பது அமைதியை வலியுறுத்துகிறது. ஒழுங்கற்ற சிந்தனைகளால் உளரும் உதடுகளை கட்டுப்படுத்துதல் என்னும் பொருள் தொனிக்கிறது. அதாவது **"சொல் மிகுதியினால் பாவமில்லாமல் போகாது."** **நீதி.** *10:27.*, **"இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்.... தீர்ப்பு உண்டு மத்.** *12:34-37*", மற்றும் **"பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கின்றார்."**. **நீதி.** *12:22*

மேலும் வாயை மூடுதல் என்பது பெருந்தீனியிலிருந்தும், பேராசையிலிருந்தும் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் பொருளையும் உணர்த்துகிறது. இப்பெருந்தீனிஎன்னும்பாவத்தினால்வாழ்வு அழிந்துவிடாதபடி **"உன் தொண்டையில் கத்தி இருப்பதாக நினைத்துக்கொள். நீதி. 23:2"** என்று திருமறை எச்சரிக்கிறது. இப்பெருந்தீனிக்கு காரணமாயிருப்பது-போதுமென்றதிருப்தியான மனநிலையற்ற தன்மையே ஆகும்.

எனவே 'உபவாசம்' என்னும் சொல்லுக்குப் பொருளான 'வாயை மூடுதல்' என்பது உதடு உளறாதபடி உள்ளத்தின்

சிந்தனைகளைக் கட்டுப்படுத்தும், நாவின் இச்சைகளின் வழி செல்லாதபடி உள்ளத்தைக் கட்டுப்படுத்தலும் ஆகும். வாயை மூடுவதின் மூலம் உள்ளத்தைக் கட்டுப்படுத்துதலே இங்கு வலியுறுத்தப்படுகிறது. உபவாசம் அனுசரிக்கும் இந்த நாற்பது நாட்களும் தூய ஆவியரின் துணையுடன் நம் நாவையடக்கி மெய் பக்தியில் வளர முயலுவோமாக.

**'மூன்றுநாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக' எஸ்தர் *4:16***

உபவாசத்தில் எடுக்கும் தீர்மானங்கள் உயர்ந்த நோக்கமுடையதாக இருக்க வேண்டும். தன்னலமற்றதாகவும், பொது நலத்தையே மையமாக கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆமானின் சதியால் அகஸ்வேரு அரசனின் ஆளுகைக்குட்பட்ட எல்லா நாட்டிலுமுள்ள அனைத்து இஸ்ரவேலரும் கொல்லப்பட வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பட்டுவிட்டது.

எஸ்தர் மக்களது உயிரைக் காக்க ஓர் முடிவு எடுக்கிறாள். **"சட்டத்திற்குப் புறம்பே எனினும் நான் மன்னரிடம் செல்வேன்! அழிவதாயின் அழிகின்றேன்" எஸ்தர் *4:16*** என்கிற ஓர் ஆபத்தான தீர்மானத்தை எடுக்கிறார்.

முதலாவது அவள் எடுத்த முடிவு தன்னலம் சார்ந்ததன்று. பொதுநலம் சார்ந்தது. இரண்டாவதாக, எஸ்தர் இந்தத் தீர்மானத்தை எடுக்க எந்தவித தயக்கமோ, தாமதமோ காட்டவில்லை. மூன்றாவதாக, எடுத்தக் தீர்மானத்தை முடிக்க தானும் உபவாசம் இருக்கிறாள்; மற்றவர்களும் உபவாசமிருந்து தன்னைத் தாங்கும்படி அழைக்கிறாள். **"சூசானில் காணப்படும் அனைத்து யூதரையும் ஒன்று சேர்ப்பீராக! எனக்காக நோன்பிருந்து மூன்றுநாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக! நானும் என் செவிலியரும் அவ்வாறே நோன்பிருப்போம்" என்கிறாள். எஸ்தர் *4:16*.**

இந்நாட்களிலும் நாம் மேற்கொள்ளும் உபவாசம் - அழிந்து கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு உயிரளிக்கிற உன்னதத் தீர்மானங்களை எடுக்க உதவுகிறதா?

நம் வாழ்விலும், செயல்களிலும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துகிற நாட்களாக இந்த லெந்து கால நாட்கள் அமையட்டும்.

## வழிபாட்டு ஒழுங்குமுறை - பிப்ரவரி 2023

| நாள் | நேரம் | வழிபாடு | அருளுரை தலைப்பு | அருளுரையாளர் |
|---|---|---|---|---|
| 01-02-2023 புதன் | காலை 6:30 மணி | மாத முதல் நாள் திருவிருந்து வழிபாடு | | ஆயர் |
| 05-02-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | திருவிருந்து வழிபாடு | படைப்பினை முழுமையாக்கும் ஓய்வுநாள்<br>ஏசாயா 65:17-25<br>எபிரேயர் 4:2-13 ; மாற்கு 2:23-28 | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | ஜெப ஐக்கியம்<br>திரு. ஜான் சாமுவேல் பென்னர் |
| 12-02-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | ஆண்கள் ஞாயிறு காலை வழிபாடு | படைப்பின் நோக்கத்தை மீறுவதாகும் வீழ்ச்சி<br>தொடக்கநூல் 6:1-13<br>ரோமர் 7:14-25 ; மத்தேயு 7:15-23 | Dr. வாட்சன் செல்வசிங் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | திரு. தேவ மித்திரன் |
| 19-02-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | திருவிருந்து வழிபாடு | மறுவுருவாக்கத்திற்கான காலம் - லெந்து<br>ஏசாயா 40:1-20<br>ரோமர் 11:13-24 ; யோவான் 2:1-11 | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | முதியோர் ஐக்கியம்<br>திரு. ஜான் சாமுவேல் பென்னர் |
| 22-02-2023 புதன் | மாலை 6:30 மணி | சாம்பல் புதன் திருவிருந்து வழிபாடு | மனம் வருந்திட அழைக்கும் சிலுவை<br>ஏசாயா 1:16-20<br>II கொரிந்தியர் 7:8-16 ; மாற்கு 1:12-15 | ஆயர் |
| 26-02-2023 ஞாயிறு | காலை 8:30 மணி | காலை வழிபாடு | தூய்மையாக்கும் கிறிஸ்து<br>சகரியா 13:1-9<br>I யோவான் 1:5-10 ; மாற்கு 1:40-45 | ஆயர் |
| | மாலை 6:30 மணி | மாலை வழிபாடு | | திரு. தேவ மித்திரன் |

## ஆண்கள் ஞாயிறு மற்றும் ஆண்கள் சிறப்பு கூடுகை



**நாள் : 12-02-2023, ஞாயிற்றுகிழமை**
**காலை வழிபாட்டுக்கு பிறகு**

**சிறப்பு செய்தி : Dr. வாட்சன் செல்வசிங்**

இந்நிகழ்வில் அனைத்து ஆண்களும் கலந்து கொண்டு இறையாசி பெற்றிட அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

## திருமறைப் போட்டி - நாகூம்

Bible Quiz

**திருமறைப்பகுதி :**
3 அத்தியாயங்களையும் 47 திருவாக்கியங்களையும் கொண்ட நாகூம் திருவாக்கினரின் நூல்

**நாள் : 26.02.2023** ஞாயிறு வழிபாட்டுக்கு பிறகு

ஆயத்தப்பட்டு அதில் பங்கு பெற அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

## வரவேற்கிறோம்

நமது வெஸ்லி தமிழ் ஆலயத்தில் ஜனவரி மாதம் திருமுழுக்கு பெற்று திருச்சபை ஐக்கியத்தில் இணைந்துள்ள கீழ்க்கண்ட கடவுளின் பிள்ளையை திருச்சபையாக வாழ்த்தி வரவேற்கிறோம்.



பெயர் :
**எய்டன் லினஸ் . வி**

பெற்றோர் பெயர் :
**விஜய் டேவிட் ராஜ், பேபி ஷர்லி**

நாள் : **15.01.2023**

## வருந்துகிறோம்


MRS. DAYAMANI . D

நமது சபையின் அங்கத்தினர்
**திருமதி. தயாமணி தன்ராஜ்**
அவர்கள் **23-01-2023** அன்று
கர்த்தருக்குள் நித்திரை
அடைந்தார்.

கவலையில் வாடும்
குடும்பத்தினரை ஜெபத்தில்
தாங்க கேட்டுக்கொள்கிறோம்.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

| 1-Feb | |
|---|---|
| Mr. | ANAND WILLIAM . H |
| Mrs. | PRATHEEPA KUMARI |
| **2-Feb** | |
| Mr. | JEYACHANDRAN . M |
| Mr. | JAMES NAVIN . J |
| Mrs. | PRASILLA PREMAVATHY . T |
| Mrs. | AMUTHA . M |
| Mr. | DISHAGN SAMUEL . J |
| Baby | RYAN SHERWOOD TOM |

| 3-Feb | |
|---|---|
| Mrs. | JOYCE . J |
| Mrs. | SUGANTHI CAROLINE |
| Mrs. | ANJALI . A |
| Mr. | BHAGATH SINGH JESUDOSS . J |
| Mr. | LAZAR . S |
| Mr. | AUGUSTIN PREM RAJ . R |
| Mr. | IMMANUEL VICTOR . H |
| Ms. | EDWINA SHALOM .T |

| 4-Feb | |
|---|---|
| Mr. | STEPHEN . P |
| Mrs. | GIRIJA DAISY |
| Mrs. | FEBILA DANI . D.S. |
| Mrs. | RACHEL SURYA . S |
| Mstr. | DANIEL HARRY . J |
| **5-Feb** | |
| Mrs. | MARY . A |
| Mr. | SELVAM . J |
| **6-Feb** | |
| Mrs. | JANET SHEBA . G |
| **7-Feb** | |
| Mr. | MARY DOSS . D |
| Mr. | JEBADURAI . J |
| Mr. | SAMUEL JOHN . P |
| Mr. | MONISH SAMUEL . R |
| **8-Feb** | |
| Mr. | SOLOMON JAYAKUMAR . B |
| **9-Feb** | |
| Mr. | JACOB . S |
| **10-Feb** | |
| Mrs. | JOSEPHINE THANGARAJ |
| Mr. | GNANAKUMAR . M |
| **11-Feb** | |
| Mr. | GEORGE . S |
| Mrs. | GEETHANJALI . K |
| **12-Feb** | |
| Mrs. | JANCY ANGEL . G |
| Mr. | JOHN DAVID . L |
| Mrs. | DIVYA . V |
| **13-Feb** | |
| Ms. | JOYAL ELIZABETH . J |
| Baby | BELLITAH PRESTEENA . G.A |

| 14-Feb | |
|---|---|
| Mrs. | GRACE CHANDRA . C |
| Mr. | JESUDOSS GRAHAM . S |
| Mrs. | HEMALATHA . L |
| Mr. | ANTONY MOSES . M |
| Mr. | SAMRAJ . V |
| Mr. | JOHN CHELLADURAI . Y |
| Baby | CHARLOTTE HAZEL |
| **15-Feb** | |
| Mrs. | LANCY EBENEZER . R |
| Mrs. | JABILA . K |
| **16-Feb** | |
| Mrs. | NIRMALA . J |
| Mrs. | KALA RUBEN . G |
| Mrs. | ELSIBAI . P |
| Mr. | SAMUEL . S |
| Mr. | PRADEEP KUMAR . P |
| Ms. | GRACE SHARON . D |
| **17-Feb** | |
| Mrs. | KALAIVANI SURESH |
| Mr. | RAVICHANDRAN . M |
| Mrs. | LALITHA KUMARI . P . L |
| Mr. | JOHN RAJESH . J |
| Mr. | GEORGE MATHEW . B |
| Mstr. | CALVIN ANDRO |
| **18-Feb** | |
| Mrs. | CHRISTY BAI . T |
| Mr. | VIMAL RAJKUMAR . J |
| Mrs. | AJEESHA . T.L |
| Mr. | AKASH JEBARAJ . I |
| Mr. | JASPAL . S |
| **19-Feb** | |
| Mr. | THIRUGNANAM . G |
| Mr. | JOHN YOVAN . T |
| Mstr. | FERNANDO RAJ |


| 20-Feb | |
|---|---|
| Mr. | JOSEPH YESUPADAM |
| Mr. | JEBA LIVINGSTON . N |
| Mr. | SAMUEL RAJKUMAR . M |
| Mr. | ELVIS KARAN |
| Mr. | ASPAPRIYAN . J |
| **21-Feb** | |
| Mrs. | GLORY RAJA PANDIAN . R |
| Mr. | SIMSON . R |
| Mr. | ALWIN FREDRICK |
| Mrs. | PREETHY RODRIGUEZ |
| Mr. | JEFFRY SHARON |
| **22-Feb** | |
| Ms. | JASMINE SARULATHA . P |
| Mr. | ANDREW SAM EDDIE PAUL |
| Ms. | JENNIFER CHANDRAMANI . R |
| Ms. | FAIRTHY EVANGELIN . R |
| **23-Feb** | |
| Mrs. | NAVAMANI |
| Mrs. | BEULA JANSI RANI . S |
| MS. | MERLIN JENNIFER . G |
| Mr. | FRANKLIN . S |

| 24-Feb | |
|---|---|
| Mrs. | BHARATHI KARUNAGARAN |
| Mrs. | GNANA SELVI . J |
| Mrs. | BENITA VASANTHI |
| Ms. | MONICA RAJAKUMARI . G |
| Ms. | MONICA RAJAKUMARI . G |
| Mstr. | JOEL SAMUEL . S |
| Mstr. | ASHER SAMRAJ . A |
| Baby | JOHAN . A |
| **25-Feb** | |
| Mr. | JOHN JOSEPH . L |
| **26-Feb** | |
| Mrs. | SAMATHANAM . B |
| Mr. | HARISON . Y |
| Mr. | GODWIN WINSTON . J |
| **27-Feb** | |
| Mr. | JOSHUA BABU . B |
| Ms. | YASHNA . S |
| **28-Feb** | |
| Mrs. | AMUTHA ROSELIN . S.K |
| Mrs. | SWETHA . P |
| Mr. | JONATHAN ELIZER PAUL . E |
| Ms. | ANGELINE SRISTIKAA . V. E. |




| | | |
|---|---|---|
| 1-Feb | Mr. VIJAY DAVID RAJ . R | Mrs. BABY SHARLY . V |
| 2-Feb | Mr. WILLIAMS . N | Mrs. KAMALA DEVI . W |
| 2-Feb | Mr. JOHNSON . S | Mrs. MARY VIMALA . J |
| 2-Feb | Mr. MARTIN SMITH . C | Mrs. DIVYA MARY . M |
| 3-Feb | Mr. MATHIVANAN . M | Mrs. HELEN PREMA . K |
| 4-Feb | Mr. JOHNSON DAVID . J | Mrs. KATHALINE JOHNSON |

| | | |
|---|---|---|
| 4-Feb | Mr. THOMAS . T | Mrs. PRISCILLA NAGOMY . T |
| 4-Feb | Mr. SAMSON . P.S | Mrs. SUJATHA . S |
| 5-Feb | Mr. PHILIP . D | Mrs. INDIRANI . P |
| 5-Feb | Mr. LAZAR . S | Mrs. JESINTHA . L |
| 6-Feb | Mr. SATHISH JAMES SOLOMON . J | Mrs. ASHA MONICA SOLOMON . C |
| 8-Feb | Mr. THOMAS . M | Mrs. BEAULA JEBARANI . T |
| 8-Feb | Mr. JOHN PALAYAM | Mrs. MERCY SHOBA . P |
| 8-Feb | Mr. GUNASEKARAN . J | Mrs. CATHERINE . A |
| 9-Feb | Mr. NITHIYANANDHAM . S | Mrs. JAYASEELY |
| 9-Feb | Mr. PRABHU JOSHUA .B.J | Mrs. MARY ANNAL . Y |
| 9-Feb | Mr. THAMBURAJ | Mrs. JANSI RANI . T |
| 9-Feb | Mr. CHRISTI KUMAR . P | Mrs. LEENA J. V |
| 9-Feb | Mr. SAMUEL RAJKUMAR | Mrs. ELIZABETH |
| 10-Feb | Mr. ELANGOVAN . B | Mrs. BEAULAH |
| 10-Feb | Mr. YESUVEDHA VICTOR .G | Mrs. SARASWATHI JAYANTHI |
| 11-Feb | Mr. SAMSON VIJAYAKUMAR . S | Mrs. BEULAH SHANTHAKUMARI . S |
| 12-Feb | Mr. VICTOR . J | Mrs. CHANDRA |
| 14-Feb | Mr. RATHNAKUMAR | Mrs. ESTHER THANGAM |
| 14-Feb | Mr. CHRISTY . S | Mrs. JAYA BHARATHI . C |
| 14-Feb | Mr. ABRAHAM ARPUTHARAJ . G | Mrs. LATHA . A |
| 15-Feb | Mr. SATHISH KUMAR . R | Mrs. RACHEL MENAKA |
| 16-Feb | Mr. PRABHUDASS . J.M | Mrs. PRISCILLA MADHAVI . W.V |
| 18-Feb | Mr. JEBA LIVINGSTON . N | Mrs. OPHELIA FLORENCE . V |
| 19-Feb | Mr. ARVIND DOSS . D | Mrs. GLORY BHAVANI . C |
| 20-Feb | Mr. EDWARD SRINIVASAN . E | Mrs. SURIA PREMALA KUMARI . S |
| 20-Feb | Mr. JOSEPH YESUPADAM | Mrs. VIDYA JOSEPH |
| 20-Feb | Mr. VIJAY . A.S | Mrs. REVATHI . K |
| 20-Feb | Mr. NAVIN JONES RICHARD . C | Mrs. DENISHA . N |
| 21-Feb | Mr. IRUDHAYARAJ | Mrs. JEBA SUDHA . I |
| 22-Feb | Mr. AMALDOSS . D | Mrs. HARRIET HEMAVATHY |
| 24-Feb | Mr. SOUNDARA PANDIAN . P | Mrs. BEULA JANSI RANI . S |
| 25-Feb | Mr. RUBEN . E | Mrs. PHILOMINA RUBEN . R |
| 27-Feb | Mr. RAJKUMAR . P | Mrs. VINOLINI . M |


குடியரசு தின கொடியேற்றம்
மரவிழா – விளையாட்டு போட்டிகள்
1
2
3

**சிலுவையின் மீது**
**தம் உடலில் நம் பாவங்களை**
**அவரே சுமந்தார்.**

I பேதுரு 2 : 24

சௌந்தர் பிரஸ், செல் : 9444165907